Judicial Form No.53

See Rule 43)

# DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II POLLACHI

| | | | |
|---|---|---|---|
| CALENDAR | Case No. | : | CC 429/2024 |
| MISCELLANEOUS | | | |
| Preliminary Register | Sessions | : | |
| | Prosecution | : | PW1 |
| Deposition of Witness for | Defence | : | |
| | Court | : | |

| | | |
|---|---|---|
| Name | – | ஜோதி லட்சுமி |
| Father's Name | – | க/பெ. கிருஷ்ணசாமி |
| Village | -- | |
| Taluk | -- | |
| Caste | -- | |
| Calling | -- | |
| Religion | -- | |
| Age | -- | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act of 1969 (Central Act 44 of 1969) on the 06th February 2026

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது

Accused 1 to 3 present. Accused counsel present.

**முதல் விசாரணை :**

நான் தற்போது மாரப்பன் வீதியில் குடியிருந்து கொண்டு துணிக்கடைக்கு சென்றுவந்தேன், தற்போது வீட்டில் இருந்து வருகிறேன். கடந்த 3 ஆண்டுகளுக்கு முன்னர் ஒருநாள் நிஷா, நித்யா மற்றும் அவரது அம்மா ஆகியோர் எனது மகன் ஹரிபிரசாத்துடன் உடன்படிக்கையின்பேரில் கடை வைத்து நடத்தி வந்தார்கள்.

அவர்களுடன் ஏற்பட்ட கருத்து வேறுபாட்டில் எனது மகன் அந்த தொழிலை விட்டு வெளியே வந்துவிட்டார். சுமார் 1,50,000/- மூதலீடு செய்திருந்தார். அதை அவர்கள் திருப்பி கொடுக்கவில்லை. எனது மகன் டெலிவரி வேலைக்கு சென்று கொண்டிருந்தார். அப்போது ஆஜர் எதிரிகள் கடைக்கு டெலிவரிக்காக எனது மகன் சென்றார். அச்சமயம் எதிரிகளுக்கும் எனது மகனுக்கும் வாக்குவாதம் ஏற்பட்டு, எனது மகனை அடித்துவிட்டார்கள், அதனால் எனது மகனின் இடது கண்ணின் கீழே காயம் ஏற்பட்டது.

எனது மகன் மருத்துவமனைக்கு சென்றார். அங்கிருந்து எனக்கு அலைபேசி மூலம் தகவல் கூறினார். நான் மருத்துவமனைக்கு சென்று எனது மகனை பார்த்தேன். பின்னர் நான், எனது அம்மா, எனது மகள் ஆகியோர் சம்பவம் குறித்து கேட்பதற்காக ஆஜர் எதிரிகளின் கடைக்கு சென்றேன், அப்போது என்னையும் ஆஜர் எதிரிகள் தாக்கினார்கள், அதில் எனது தலையில் தாக்கி ஏற்பட்ட காயத்தால் 12 தையல் போட்டுள்ளார்கள், கண்ணிற்கு கீழே என்னை தாக்கினார்கள்.

இரத்தத்துடன் நான் காவல்நிலையம் சென்று புகார் அளித்துவிட்டு, பின்னர் பொள்ளாச்சி அரசு மருத்துவமனைக்கு சென்று சிகிச்சைக்காக சேர்ந்தேன். பின்னர் மருததுவமனையில் போலிசார் வந்து சம்பவம் குறித்து புகார் வாக்குமூலம் பெற்றார்கள். தற்போது என்முன் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அது **அ.சா.ஆ.1** ஆகும். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

சம்பவம் நடந்து 10 நிமிடத்திற்குள் காவல்நிலையம் சென்றுவிட்டேன் என்றால் சரிதான். புகாரை காவல்நிலையத்தில் கூறிய பின்பு நான் மருத்துவமனைக்கு செல்லுமாறு அறிவுறுத்தினார்கள் என்றால் சரிதான், அங்கு போலிசார் வந்து என்னிடம் புகார் வாக்குமூலம் பெற்றார்கள்.

காவல்நிலையம் சென்றபோது, போலிசார் என்துணியின் மீது இரத்தக்றை ஆனதை குறித்து கொண்டார்கள் என்றால் சரிதான். பின்னிட்டு இரத்தக்கறை படிந்த துணியை காவல்நிலையத்திற்கு சென்று கொடுத்தேன் என்றால் எனக்கு ஞாபகமில்லை, நான்

இரண்டு நாட்களாக அதே துணியைதான் அணிந்திருந்தேன். நான் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றபோது, அதே மருத்துவமனையில்தான் ஆஜர் எதிரிகளும் இருந்தார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

ஆஜர் எதிரிகள் இருக்கும் கடைக்கு நான்தான் சென்றேன் என்றால் சரிதான். நானும், அம்மாவும், எனது மகளும் மூன்று பேரும் கடைக்கு சென்றோம். நான்தான் தட்டிக் கேட்டேன் என்றால் சரிதான், வாயில்தான் கேட்டேன், அடித்து கேட்கவில்லை. எங்களுக்குள் ஏற்பட்ட அடிதடியில் ஆஜர் எதிரிகளுக்கும் காயம் ஏற்பட்டது என்றால் அது எனக்கு தெரியவில்லை.

எவ்வளவு நேரம் ஆஜர் எதிரிகளின் கடையில் இருந்தோம் என்றால் அரை மணி நேரம் பேசிக்கொண்டிருந்தோம், அவர்கள் திடீரென எனது அம்மாவை தள்ளிவிட்டார்கள், அம்மாவை தூக்குவதற்குள் என்னை தலையில் அடித்துவிட்டார்கள், பின்பு என்ன நடந்தது என்று எனக்கு சரியாக ஞாபகமில்லை. நான் மயக்கமாகிவிட்டேன்.

எந்த மருத்துவமனைக்கு எடுத்து சென்றார்கள் என்றால் எனக்கு சிறியதாக சுயநினைவு இருந்தது, எனது மகள் என்னை காவல்நிலையத்திற்கு அழைத்து சென்றுவிட்டு, பின்னர் மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தார். எனது மகள் கீர்த்தனாவும் புகார் எழுதிக் கொடுத்தார்கள் என்றால் இல்லை.

சம்பவயிடத்திற்கு எனது மகன் நான் மருத்துவமனைக்கு சென்ற 10 நிமிடத்தில் என்னை வந்து பார்த்தார். எனது மகன் புகார் அளிக்கவில்லை. எனது மகனுக்கு காயம் ஏற்பட்டது, அதனால் அவர் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார். எனது மகனுக்கு ஏற்பட்ட காயத்திற்காக அவர் புகார் எதுவும் அளிக்கவில்லை.

எனது மகள் கீர்த்தனா எதிரிகளின் கடைக்கு பக்கத்தில்தான் வேலை செய்து கொண்டிருந்தார் என்றால் சரிதான். சம்பவம் நடந்தபோது, நான் என் மகளுக்கு அலைபேசி மூலம் தொடர்பு கொண்டு வரசொன்னேன், எனது மகள் வெளியே வந்துவிட்டார். எனது மகனுக்கு பிரச்சனை ஏற்பட்டபோது, எனது மகள் அலுவலகத்தில் வேலை செய்து கொண்டிருந்தார்.

எனது மகள் வேலை செய்யும் கடை ஆஜர் எதிரிகளின் கடைக்கு ஒருகடை தள்ளி அடுத்த கடை யாக உள்ளது என்றால் சரிதான். எனது மகனுக்கு பிரச்சனை ஏற்பட்டபோது, எனது மகள் எனக்கு தகவல் சொல்லியிருப்பார் என்றால் சரியல்ல, எனது மகள் கடை ஆஜர் எதிரிகளின் கடைக்கு சற்று தள்ளியுள்ளது, அதனால் அவருக்கு தெரியவாய்ப்பில்லை. எனது மகன், எனது மகளுக்கு முதலில் தகவல் கூறவில்லையென்றால் சரிதான், எனக்குதான் முதலில் தகவல் கூறினார்.

எனது மகன் எதிரிகள் அடித்துவிட்டதாக காவல்நிலையத்தில் முதலில் புகார்

அளித்தார் என்றால் இல்லை, என்னிடம் கூறிவிட்டு, முதலில் அரசு மருத்துவமனைக்கு சென்றார். எனது மகனுக்கும் ஆஜர் எதிரிகளுக்கும் இடையே எழுத்து பூர்வமான உடன்படிக்கை இல்லை, வாய்மொழியாகதான் தொழில் செய்து வந்தார்கள். எனது மகன் ஆஜர் எதிரிகளின் கடையில் வேலை செய்து, கையாடல் செய்த காரணத்திற்காக ஆஜர் எதிரிகள் மீது பொய்யாக புகார் அளித்துள்ளார்கள் என்றால் சரியல்ல.

எதிரிகளுக்கு கொடுக்க வேண்டிய பணத்தை திருப்பிக்கொடுக்காமல், எதிரிகளின் கடைக்கு அத்துமீறி உள்நுழைந்து பிரச்சனை செய்தோம் என்றால் சரியல்ல. நான்தான் அவர்களை அடிக்க முறபடும்போது, கீழே விழுந்து காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. சொன்ன நேரத்தில் சொன்ன சமயத்தில் புகார் கொடுக்கவில்லையென்றாலும், எதிரிகளின் மீது பொய்யாக வழக்கு புனையப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. வழக்கு சம்பவத்திற்கு இரண்டு மாதத்திற்கு முன்பு எனது மகனுக்கும் ஆஜர் எதிரிகளுக்கு இடையே கையாடல் சம்பந்தமாக பிரச்சனை ஏற்பட்டு மனு இரசீது காவல்நிலையத்தில் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** - இல்லை.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

**(Sd/-. Thiru. E. Pragasam BA.,BL.,)**

Judicial Magistrate No. II,
Pollachi.

Judicial Form No.53

See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II POLLACHI

| | | | |
|---|---|---|---|
| CALENDAR | Case No. | : | CC 429/2024 |
| MISCELLANEOUS | | | |
| Preliminary Register | Sessions | : | |
| | Prosecution | : | PW2 |
| Deposition of Witness for | Defence | : | |
| | Court | : | |

| | | |
|---|---|---|
| Name | – | கீர்த்தனா |
| Father's Name | – | க/பெ. அசோக்கௌதம் |
| Village | -- | |
| Taluk | -- | |
| Caste | -- | |
| Calling | -- | |
| Religion | -- | |
| Age | -- | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act of 1969 (Central Act 44 of 1969) on the 06th February 2026

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது

Accused 1 to 3 present. Accused counsel present.

**முதல் விசாரணை :**

நான் தற்போது மாரப்பன் வீதியில் குடியிருந்து கொண்டு லக்கி டுர்ஸ் அன்ட் டிராவல்ஸ் என்ற நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். கடந்த அக்டோபர் 17 ம் தேதி வருடம் ஞாபகமில்லை, மதியம் நேரத்தில் எனது தம்பியும் ஆஜர் எதிரிகளும் கூட்டாளியாக சேர்ந்து கடை வைத்து நடத்தி வந்தார்கள். பணம் பரிவர்த்தனை சம்பந்தமாக பிரச்சனை இருந்து வந்தது.

எனது தம்பியின் கம்யூட்டரை வாங்குவதற்காக மோனிகாவின் வீட்டிற்கு சென்றுள்ளார். அப்போது எனது தம்பியுடன் சண்டையிட்டு எனது தம்பியை கீழே தள்ளிவிட்டதில், எனது தம்பியின் கண்ணில் காயம் ஏற்பட்டது. பின்னர் சம்பவம் குறித்து எனது தம்பி எனது அம்மாவிடம் கூறினார். அதை எனது அம்மா என்னிடம் கூறினார். நானும் அம்மாவும் அதை கேட்பதற்காக ஆஜர் எதிரிகளின் கடைக்கு சென்றோம்.

கடைக்கு சென்றபோது, இருவருக்கும் இடையே பேச்சுவார்த்தையில் தகராறு ஏற்பட்டது. அப்போது எனது அம்மாவின் தலையில் அடித்ததில் எனது அம்மாவிற்கு தலையில் காயம் ஏற்பட்டது. பின்னர் நானும், எனது அம்மா, எனது தம்பி மூவரும் காவல்நிலையம் சென்று புகார் அளித்துவிட்டு, பொள்ளாச்சி அரசு மருததுவமனைக்கு சிகிச்சைக்காக சென்றோம். போலிசார் மருததுவமனைக்கு வந்து என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

தற்போது கூறிய விவரங்களைதான் போலிசார் விசாரணையிலும் கூறியுள்ளேன் என்றால் சரிதான். மோனிகா வீட்டில்தான் எனது தம்பிக்கும் மோனிகாவிற்கும் பிரச்சனை நடந்தது என்றால் சரிதான், அந்த பிரச்சனையில்தான் எனது தம்பிக்கு காயம் ஏற்பட்டது என்றால் சரிதான்.

நானும் எனது அம்மாவும் ஆஜர் எதிரிகளின் கடைக்கு சென்று என்ன பிரச்சனை என்று கேட்க சென்றோம் என்றால் சரிதான். எனது தம்பி அவருக்கு ஏற்பட்ட பிரச்சனை சம்பந்தமாக காவல்நிலையத்தில் புகார் அளித்தார் என்றால் இல்லை. பக்கத்து கடையில் இருந்த நான் ஏன் இவ்வாறு பிரச்சனை செய்கிறீர்கள் என்று தனியாக சென்று ஆஜர் எதிரிகளின் கடையில் கேட்டேன் என்றால் சரியல்ல, எனது அம்மாவுடன் சென்றுதான் கேட்டேன்.

பிரச்சனை குறித்து எனது அம்மாதான் எனக்கு கூறினார். நான் சென்று எனது அம்மா கூறியதன் அடிப்படையில் பக்கத்து கடையில் இருக்கும் எதிரிகளை நான் பார்க்கவில்லையென்றால் சரிதான். மேற்படி சம்பவமே நடைபெறவில்லை என்றாலும்,

அவ்வாறு நடந்திருந்தால் உடனே சென்று எனது தம்பியை பார்த்திருப்பேன் என்றால் சரியல்ல, பிரச்சனை நடந்தது. நாங்கள் சென்று பேசி எனது அம்மாவின் அடித்து காயம் ஏற்பட்டதற்கு பின்னர்தான் எனது தம்பி அங்கு வந்தார்.

மேற்படி பிரச்சனையில் ஆஜர் எதிரிகளுக்கும் காயம் ஏற்பட்டது என்றால் இல்லை. பக்கத்து கடையில் இருந்தவர்கள் இப்படி வந்து பிரச்சனை செய்யக்கூடாது காவல்நிலையம் சென்று புகார் அளிக்க வேண்டுமென்று அறிவுறுத்தினார்கள் என்றால் சரியல்ல. எனது தம்பிக்கும் ஆஜர் எதிரிகளுக்கும் இடையே என்ன கொடுக்கல் வாங்கல் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

நான் மருத்துவமனையில் இருந்தபோது என்னிடம் விசாரித்து கையொப்பம் வாங்கினார்கள் என்றால் சரிதான். எனது அம்மாவும் நானும் அத்துமீறி எதிரிகளின் கடைக்கு சென்று, நாங்கள்தான் எதிரிகளை அடித்தோம் என்றாலும், எனது அம்மா அவராகவே கீழே விழுந்ததால்தான் காயம் ஏற்படடது என்றாலும் சரியல்ல.

எனது தம்பி மோனிகாவின் வீட்டில் அத்துமீறி ரகளையில் ஈடுபட்டதால் எந்த புகாரும் கொடுக்கவில்லையென்றால் சரியல்ல. எனது தம்பி எதிரிகளின் கடையில் கையாடல் செய்ததை மறைத்து எதிரிகளின் மீது பொய்யாக புகார் கொடுத்து சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** - இல்லை.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

**(Sd/-. Thiru. E. Pragasam BA.,BL.,)**

Judicial Magistrate No. II,
Pollachi.